தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

சென்னை–6

ந.க.எண்.23254/அ3/இ1/2014 நாள்.18 .10.2014

-----

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – உதவியாளர் பணியிலிருந்து இருக்கைப்பணி கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்க 15.03.2014 நாளின்படி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் – சார்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.707 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்.03.07.1981.
2. அரசாணை 2 (டி) எண்.38 பள்ளக்கல்வி (ஆர்2) துறை நாள்.23.07.2009.
3. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 33050/அ3/இ1/2014 நாள்.28.04.2014.

-----

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உதவியாளர் பதவியிலிருந்து, இருக்கைப்பணி கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்க ஏதுவாக 15.03.2014 நாளின்படி 2004 மற்றும் 2005 ஆண்டுகளில் உதவியாளராக பதவி உயர்வு பெற்ற பணியாளர்களுக்கு முன்னுரிமை பெயர் பட்டியல் முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் உரிய அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் தயார் செய்து இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலவர்களும் அலுவலக தகவல் பலகையில் ஒட்டி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இம்முன்னுரிமைப் பட்டியலில் எவருடைய பெயராவது சேர்க்காமல் விடுபட்டு இருந்தாலோ அல்லது தங்களது முன்னுரிமையை உரிய இடத்தில் சேர்க்கவில்லை எனத் தெரிந்தாலோ சம்பந்தப்பட்ட பணியாளர் தங்களது முறையீட்டினை இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பார்வை 1 ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட உரு மாத காலத்திற்குள் அனுப்பி வைத்தல் வேண்டும். தற்போதைய அலுவலக முகவரி மாறுபட்டிருப்பின் அதன் விவரத்தையும் உடன் தெரிவித்தல் வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் மேல்முறையீடு பெறப்படவில்லையெனில் தெரிவிக்க விவரம் ஏதும் இல்லை எனக் கருதி பட்டியலில் இடம் பெற்றுள்ள முன்னுரிமை வரிசைப்படி உத்தேச காலிப்பணியிடத்திற்கு ஏற்ப தேர்ந்தோர் பட்டியல் ஏற்பளித்து பதவி உயர்வு வழங்கப்படும், என்பதால் முன்னுரிமைப் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ளார் என்பதற்காக உயர்வு உரிமை கோர இயலாது.

www.kalvikural.com

இப்பட்டியலில் இடம் பெற்றவர்கள் எவரேனும் துறைத்தேர்வுகள், மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்வு மற்றும் பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெறாதது மற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியில் பணிவரன்முறை விடுபட்டிருத்தல் ஆகிய விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளர் உடன் தெரிவித்தல் வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலர்களும் உறுதி செய்து மாற்றம் இருப்பின் விவரம் தெரிவிக்கப்படவேண்டும்.

மேலும் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட ஒரு சில கருத்துருக்களில், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ள பணியாளர்கள் சார்பாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கருத்துக்கள் பெறப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. எனவே, முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதையும் 15.03.2014–க்கு முன்னர் 5 ஆண்டுகளுக்கு தண்டனை வழங்கப்படவில்லை என்பதையும் மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து உறுதி செய்யுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 15.03.2014 க்கு முன்னர் 5 ஆண்டுகளுக்கு ஒழுங்கு நடவடிக்கை முடிந்து தண்டனை வழங்கப்பட்டிருப்பின் தண்டனை மற்றும் தண்டனை காலம் முடிவுற்றுள்ளதா என்பதனை சரிபார்க்குமாறும் நிலுவையிருப்பின் அதன் விவரத்தினையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.பள்ளிக் கல்வி இயக்ககம் தவிர்த்து பிற இயக்குநர்கள் அலுவலகத்தில் பிற துறையில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின் அதன் விவரம் தெரிவிக்கப்பட வேண்டும். இதில் பின்னர் ஏதேனும் தவறு ஏற்படின் உரிய அலுவலகத் தலைவர்கள் மற்றும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரே முழுபொறுப்பேற்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பட்டியலினை தங்களது ஆளுகைக்குட்பட்ட சம்பந்தப்பட்ட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் (எஸ்.எஸ்.ஏ) மாவட்ட கல்வி அலுவலர்கள்/மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர்கள் மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி அவர்களது ஒப்புதலை பெற்று கோப்பில் வைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றதன் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி இம்முன்னுரிமைப் பட்டியலில் நகல்களை சம்பந்தப்பட்ட அனைத்து பள்ளிகள் அலுவலகங்களுக்கு அனுப்பி அன்னார்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை பெற்று கோப்பில் வைத்துக் கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. முன்னுரிமைப் பட்டியலின் நகல் ஒன்றினை அலுவலகத் தகவல் பலகையில் ஒட்ட வேண்டும்.
2. சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்கள் / பள்ளிகளுக்கு 15.10.2013–க்குள் அனுப்பப்பட வேண்டும்.
3. தங்களது மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள பணியாளர் விவரங்களை முன்னுரிமைப் பட்டியலில் உள்ள விவரங்கள தனியே தட்டச்சு செய்து வைத்துக் கொள்ள

வேண்டும். (Extract) அத்துடன் பணியாளர் கையொப்பம் பெற ஒரு கலம் இணைத்துக் கொள்ள வேண்டும்.

4. சம்பந்தப்பட்ட பணியாளர்களை 17.10.2014 அன்று பணிப்பதிவேட்டுடன் நேரில் வரவழைத்து முன்னுரிமைப் பட்டியலில் உள்ள தமது விவரங்கள் பெயர், பணிபுரியும் அலுவலகம், பிறந்த தேதி, ஒவ்வொரு ஊட்டுப் பதவியிலும் பணியில் சேர்ந்த தேதி மற்றும் பணிவரன்முறை தேதி ஆகியவை சரியாக உள்ளதா என சரிபார்த்தேன் சரியாக உள்ளது என கையொப்பமிட்டு தொகுப்பு அறிக்கை 29.10.2014 க்குள் அனுப்பவேண்டும்.
5. பட்டியல் மேல்முறையீடுகள் இருந்தால் அதன் விவரங்கள் சம்பந்தப்பட்ட பணியாளரிடமிருந்து உரிய அலுவலர் மூலம் பெற்று ஆதார ஆவணங்களுடன் தொகுத்து 1 மாதக் காலத்திற்குள் முதன்மைக்கல்வி அலுவலர்கள் அனுப்பி வைக்க வேண்டும் இதில் எவ்வித சுணக்கமும் கூடாது.
6. மேல்முறையீடு தெரிவிக்கும் பணியாளர்கள் சரிபாக்கும் பட்டியலில் மேல்முறையீடு உள்ளது என எழுதி கைபொப்பமிட்டால் போதுமானது. இவ்வாறு சரிபார்த்த பட்டியல் பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும். மேல்முறையீடு உள்ளது என்பதற்காக நிறுத்தக்கூடாது. மேல்முறையீடுகள் பத்தி 5–ல் உள்ளவாறு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தனியே அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு பெறப்படவில்லையெனில் மேல்முறையீடு ஏதுமில்லை எனக் கருதி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.
7. முன்னுரிமைப் பட்டியல் உள்ளவர்கள் மீது பள்ளிக்கல்வி இயக்ககத்தில் உள்ள பிற இயக்கங்கள் அல்லது ஊழல் கண்காணிப்புத்துறை நடவடிக்கை ஏதேனும் இருப்பின் அதன் விவரங்கள் எந்த அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது, செயல்முறை ந.க.எண். நாள். போன்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை முடிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தால் அத்தண்டனைகள் நிறைவேற்றப்பட்ட முழு விவரம் பணிப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் ஆணை நகல்களுடன் முழுமையான வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
8. இப்பட்டியலில் உள்ள பணியாளர்கள் ஓய்வு பெற்றிருந்தாலோ, பட்டதாரி அல்லது முதுகலை ஆசிரியராக பணியில் சென்றிருந்தாலோ அது சார்ந்த விவரங்களை அன்னாரின் பெயருக்கு எதிரே தெரிவிக்க வேண்டும்.
9. மேலும் இப்பட்டியலில் உள்ள பணியாளர் பட்டியலில் ஒரு வருடத்திற்கு மேல் பணிக்கு வராமலேயே தகவலின்றி பணிக்கு வராமல் இருந்தால் அவர்களின் விவரம் தெரிவிக்கப்பட வேண்டும்.
10. மேலும் இம்முன்வரிசைப் பட்டியலில் எந்த பணியாளர் பெயர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுடைய முறையீட்டினையும் உரிய காலக் கெடுவிற்குள் தொகுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் தங்களது மாவட்டத்தில் எந்த பணியாளர் பெயரும் விடுபடவில்லை என்ற சான்றினை முதன்மைக்கல்வி அலுவலரால் அளிக்கப்பட வேண்டும்.

11. மேலும் இம்முன்னுரிமைப் பட்டியலில் உள்ளவர்கள் பதவி உயர்வினை தற்காலிக உரிமைவிடல் / நிரந்தரமாக உரிமைவிடல் செய்திருந்தால், உரிமைவிடல் ஏற்கப்பட்டு அனுமதி வழங்கிய ஆணை எண், நாள் மற்றும் அதன் நகல்கள் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

12. இம்முன்னுரிமைப் பட்டியல் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் W.P.No. 15318/2009, W.P.No. 25095/2009, W.P.(MD) No.5300/2010, W.P.(MD) No. 5301/2010 & W.P.No. 29677/2012 ஆகியவற்றில் வழங்கப்படும் இறுதி தீர்பிற்கு உட்பட்டது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இம்முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மீது அந்தந்த துறை இயக்குநர்களால் மற்றும் பிற துறை இயக்குநர்கள் மற்றும் அலுவலக தலைவர்களால் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கப்பட்டு நிலுவையிலிருப்பின் அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் பின் விளைவுகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு, இதனை முதன்மைக்கல்வி அலுவலகத்தின் தகவல் பலகையில் ஒட்டி வைப்பதுடன் அனைத்து சார்நிலை அலுவலகங்கள் மற்றும் பணியார்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: முன்னுரிமைப் பட்டியல்

10/10/2014

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

10/10/14

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

(மின் அஞ்சல் மூலமாக)

1. அனைத்து ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி முதல்வர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள்.
4. மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்
5. அனைத்து இயக்குநர்கள் (தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

www.kalvikural.com